உலக வரலாற்றில் அதிகமாக விற்பனையாகும் புத்தகம் வேதாகமம். இந்த வேதாகமம் வரலாறு, நாகரீகம் இலக்கியம் போன்றவற்றில் மிகுந்த செல்வாக்குடையதாய் இருந்து வருகிறது. இந்த காரணத்துக்காக மட்டும் மக்கள் இந்த வேதாகமத்தை வாசிக்க மிகவும் வாஞ்சிக்கின்றனர்.

இருப்பினும் வேதாகமம் வரலாறு, நாகரீகத்தில் சிறந்தது என்பதற்கும் மேலாய் அது தேவனிடமிருந்து வந்த செய்தி என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்த செய்தி உலகமெங்கும் உள்ள மக்களுக்காக நம்மை நேசிக்கிறவரும் பராமரிக்கிறவருமாகிய பரலோகத்தில் இருக்கும் நம்முடைய பிதாவாகிய தேவனால் கொடுக்கப்பட்டது. யார் இந்த செய்தியை வேண்டும் என்று வாஞ்சிக்கின்றார்களோ அவர்களுக்கு புதிய, பூரணமான பூமியில் என்றைக்கும் உயிரோடிருக்கும் நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

The Bible - The Word of God - TAMIL
1500 copies - 2007

- இலவச மாதாந்திர வேதாகம பத்திரிக்கை.
- வேதாகம தொடர் அஞ்சல் வழி கல்வி.
- அருகாமையில் நடைபெறும் வேதாகம கலந்துரையாடல் வேதஆராய்ச்சி.

மேல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

*கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு தொடர்புக்கு*

**கிறிஸ்டடெ.ஃல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண் 4237
பெங்களூர் 560042, இந்தியா

*வேறு இடங்களுக்கு*
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**




# வேதாகமம் தேவனுடைய வார்த்தை

**மைக் புல்**

# வேதாகமம், தேவனுடைய வார்த்தை

மைக் புல்

## ஓர் ஒப்பற்ற புத்தகம்

வேதாகமம் ஒரு பழைய புத்தகமாயிருந்தாலும், அது தொடர்ந்து மக்களைக் கிரியை செய்யும்படி வழிநடத்துகிறது. உலகம் முழுவதிலும் உள்ள ஆண்களும் பெண்களும் இதை வாசித்துத் தங்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளுகிறார்கள்.

இத்தனை அதிகமான ஜனங்களுக்கு என்ன காரியம் தூண்டுதலாய் இருக்கிறது? ஏன் வேதாகமம் அத்தனை வல்லமையுள்ளதாய் இருக்கிறது? எப்படி இந்த புத்தகம் மக்களுக்கு மகிழ்ச்சியும், திருப்திகரமான வாழ்க்கையையும் உருவாக்குகிறது? இந்த சிறிய கைப்புத்தகமானது இந்த எல்லாக் கேள்விகளுக்கும் மட்டுமல்லாது கீழ் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கும் பதிலைத் தரும்.

**வேதாகமம் எங்கிருந்து வந்தது?**

**எப்போது அது எழுதப்பட்டது?**

**வேதாகமம் நம்பத் தகுந்ததா?**

**வேதாகமத்தில் அடங்கியுள்ளது எது?**

**எதற்காக வேதாகமம் எழுதப்பட்டது?**

## எழுத்துக்களின் ஓர் தொகுப்பு

வேதாகமத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. முதலாவது, பழங்கால இஸ்ரவேலரின் தூய எழுத்துக்கள் பழைய ஏற்பாடு என்றும், இரண்டாவதாக தூய கிறிஸ்தவ எழுத்துக்கள் புதிய ஏற்பாடு என்றும் அறியப்பட்டுள்ளது.

வேதாகமம் பல மனிதர்களால் பல வருடங்களாக

எழுதப்பட்டதாயினும் வேதாகமம் முழுவதிலும் அதின் கருப் பொருள் மற்றும் செய்தி மாறுபடாதிருக்கும். இந்த அற்புதமான கோர்வை ஏனென்றால், ஜீவிக்கிற தேவன் இந்த எழுத்தாளர்களுக்குத் தூண்டுகோலாய் இருந்தார். இப்படியாக தேவனே அவர்களுக்கு எழுதுவதற்கும், பேசுவதற்கும் வார்த்தைகளைக் கொடுத்தார். எனவே இந்த வேத எழுத்துக்கள் மாத்திரமே ஒரே உண்மை தேவனிடமிருந்து மனுக்குலத்துக்குக் கிடைத்தது. எனவே வேதாகமம் ஒப்பற்றது.

வேதாகமம் அதன் மூலபாஷைகளாகிய எபிரேயு, கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டதாயிருந்தாலும் அதின் செய்தி அனைவருக்குமுரியது. கற்றவர், கல்லாதவர், பணக்காரர் ஏழை என்ற பாகுபாடு இல்லை. ''தேவன் பட்சாபதாமுள்ளவரல்ல" (அப்போஸ்தலர் 10:34; ரோமர் 2:11; எபேசியர் 6:9) இந்த வேதாகமத்திலுள்ள நற்செய்தி எல்லா தேசத்தாருக்கும், எல்லா மொழியினருக்கும் சொந்தமாகும் (பார்க்க கலாத்தியர் 3:28-29; எரேமியா 9:23-24).

## புத்தகங்கள், அதிகாரங்கள், வசனங்கள்

வேதாகமத்தில் 66 புத்தகங்கள் உள்ளன. அவற்றில் சில சிறிய புத்தகங்கள் சில நிமிடங்களிலேயே படிக்கக் கூடியனவாகவும், மற்றவை பெரிய புத்தகங்களாகவும் இருக்கின்றன. எளிதில் புரிந்துகொள்ளும்படியாக வேதாகமத்தின் புத்தகங்கள் பல அதிகாரங்களாகவும் (வழக்கமாக ஒரு பக்கம்) வசனங்களாகவும் (ஒரு சில வார்த்தைகள்) பிரிக்கப்பட்டு இருக்கின்றன.

வேதபகுதிகளைச் சுட்டிக் காண்பிக்கின்ற பொழுது அது எந்த புத்தகம். எத்தனையாவது அதிகாரம், எந்த வசனம், என காண்பிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஏசாயா 45:6 என்றால், அது ஏசாயாவின் புத்தகம், 45வது அதிகாரம், 6வது வசனம் ஆகும். உங்களிடம் ஒரு வேதாகமம் இருந்தால்



நீங்கள் வேதாகமத்தின் ஆரம்பப் பக்கங்களிலிருக்கிற அட்டவணையைப் பார்த்து, வசனங்களைக் கண்டு கொள்ளலாம். இந்தச் சிறிய புத்தகத்தில் உள்ள வேத பகுதிகளை நீங்கள் எடுத்துப் பார்க்கும்படியாக உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

## எப்போது எங்கே?

பழைய ஏற்பாடானது சுமார் ஆயிரம் வருடங்களாக எழுதப்பட்டது. சுமார் 3,500 வருடங்களுக்கு முன்பாக எழுத ஆரம்பிக்கப்பட்ட இந்த வேதாகமம் 2,400 வருடங்களுக்கு முன்பாக எழுதி முடிக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பெரும்பாலும் யூதராயிருந்தாலும் அவர்களில் பலர் வெவ்வேறு ஊர்களில் நீண்ட தொலைவில் வசித்தனர். சிலர் இன்றைய இஸ்ரவேல் தேசம் இருக்கின்ற இடத்திலிருந்து எழுதினார்கள். மற்றவர்கள் ஈராக், சீரியா, எகிப்து போன்ற நாடுகளிலிருந்து கொண்டு எழுதினார்கள். அந்நாட்களில் சில நாடுகளின் பெயர்கள் வேறாயிருந்தது.

புதிய ஏற்பாடானது மிகவும் குறுகிய காலத்தில் கிறிஸ்துவுக்குப்பின் முதல் நூற்றாண்டுக்குள்ளாக எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதி யூத ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. சில ஆசிரியர்கள் இஸ்ரவேல் தேசத்திலிருந்தும் (வேறுபல ஆசிரியர்கள்) இன்றைய துருக்கி, க்ரீஸ், இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்தும் எழுதினர்.

வேதப் புத்தகத்தை எழுதிய பலர் தொழிலின்படி ஒரு எழுத்தாளர் அல்லர், ஆனால் மேய்ப்பர்களாகவும், அரசர்களாகவும், வைத்தியர்களாகவும், விவசாயிகளாகவும், மீன் பிடிக்கிறவர்களாகவும் மற்றும் பலராகவும் இருந்தனர்.

இந்த மக்கள் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டு, அவருடைய செய்தியைச் சொல்லவும் எழுதவும் உபயோகிக்கப்பட்டனர்.

## கட்டுக்கதையா அல்லது உண்மையானதா?

பழமையான புத்தகங்கள் பல இந்த உலகில் உள்ளன. வேதாகமம் ஒரு கற்பனையான கட்டுக்கதையா அல்லது உண்மையானதா என்று எப்படி நாம் கூற முடியும்?

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தியில் நாம் உறுதியான நம்பிக்கை வைப்பதற்குப் பல முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவதாக வேதாகமம் ஒரு தவறும் இல்லாத சரியான ஒப்பற்ற வரலாற்றுப் புத்தகம். இதில் விவரிக்கப்பட்டுள்ள அரசர்களும், நிகழ்ச்சிகளும் சரியானவை என வேறு பழமையான வரலாறுகளின் மூலம் நிரூபிக்கப்படுகின்றன. மேலும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இடங்களும் பொருட்களும் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கே மக்கள் குழுவாகச் சென்று பூமியைத்தோண்டி வேதாகம காலத்தில் உள்ள நகரங்களை வெளிக்கொண்டு வருகிறார்கள். இந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களிலேயே இந்த நகரங்கள் இருப்பதையும் அதனைப்பற்றிய செய்தி அத்தனையும் உண்மை என்பதையும் கண்டறிந்துள்ளனர்.

மறுபடியும், வேதாகமம் உண்மையானது என்று நம்பத்தகுந்தது. ஏனென்றால் அதனுடைய வருங்காலத்தைப் பற்றிய தைரியமான வார்த்தைகள் எப்போதுமே மிகவும் சரியானவைகள்.

எடுத்துக்காட்டாக, இன்று இருப்பதைப் போலவே, வேதாகம காலத்திலும் பல நாடுகள் இருந்தன. அதில் ஒன்று ஏதோம், ஏசாவின் வழி வந்தவர்கள். வேதாகமம் எழுதப்பட



காரணராயிருந்த தேவன், இந்த நாடு இனி ஒரு நாடாய் இருப்பதுமில்லை; இந்த தேசத்தில் ஜனங்கள் தங்கி தாபரிப்பதுமில்லை; அவர்கள் ஒரு ஜனமாயிருக்கப் போவதுமில்லை என்று இந்த ஜனத்தின் வருங்காலத்தைப் பற்றிய ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறினார். வேதாகமம் ஒபதியாவின் ஆகமத்தில் உறுதியாக கூறுகின்றது:

“ஏசாவின் வம்சத்தில் மீதியாயிராதபடி இவர்களைப் பட்சிப்பார்கள். கர்த்தர் இதைச் சொன்னார்” (ஒபதியா 1:18).

இதற்கு நேர் மாறாக வேதாகமத்தின் தேவன் விசேஷித்த விதமாக யூதர்களிடம் கூறினார்:

‘‘உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன். உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்” (எரேமியா 30:11).

இவைகள் ஒரு மனிதனுடைய தீர்க்கதரிசனங்கள் அல்ல. ஒருவேளை நாம், இன்றைய நாடுகளில் எந்தெந்த நாடுகள் இனியும் ஒன்று அல்லது இரண்டு ஆயிரம் வருடங்கள் மட்டுமே ஒரு நாடாயிருக்கும் என்று தீர்க்கதரிசனம் கூறவேண்டுமென்றால் நமக்கு அது மிகவும் கடினம். இப்படியாக இந்த தீர்க்கதரிசனங்கள் மட்டுமல்லாது வருங்காலத்தைப் பற்றி இன்னும் அதிகமான தீர்க்கதரிசனங்கள் இருப்பதால் வேதாகமம் - தேவனுடைய வார்த்தை என்று நாம் உறுதியாக நம்பலாம்.

வேதாகமம் உண்மையானது, அது ஒரு கற்பனைக்கதை அல்ல என்று நாம் நம்புவதற்கு வேறு ஒரு காரணம் என்னவென்றால், வேதாகமத்தின் ஆகமங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகின்றதாகவும், அதன் வசனங்கள்

பொருந்துகிறதாகவும் இருக்கின்றது. வேத பகுதிகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலகட்டத்தில் எழுத்தப்பட்டதாயிருப்பினும் முரண்பாடுகளைக் காட்டிலும் அதின் செய்தி தேவனைப்பற்றிய உண்மைகளை ஒத்துக்கொள்ளுகின்றதாய் இருக்கின்றது.

வேதாகமம் புரிந்துகொள்ளுவதற்குக் கடினமான புத்தகம் அல்ல. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சிலருக்கு தேவன் தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்தி இதை வாசிக்க விரும்பும் அனைவருக்கும் தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை அறிவித்தார். (ரோமர் 16:25-26; எபேசியர் 1:9; கொலோசெயர் 1:26-27)

## வேதாகமத்தில் என்ன அடங்கி இருக்கிறது?

வேதாகமம் நமக்குத் தேவனைப்பற்றி கூறுகின்றது. அவருடைய குணாதிசயங்களும், மகத்துவங்களும், மட்டுமல்லாது அவரது சிருஷ்டிப்பின் வல்லமை, அழியாமை போன்றவற்றையும் காண்பிக்கின்றது. வேதாகமம், தேவன் மனுகுலத்தைத் மது சொந்த பிள்ளைகளாக நேசிக்கின்றதையும், அவர்களிடம் அன்பையும் கீழ்ப்படிதலையும் எதிர்ப்பார்கின்றதையும் வெளிப்படுத்துகின்றது. அவர் ஒருவரே தேவன் என்று வேதாகமம் உறுதியாய் கூறுகின்றது.

“நானே கர்த்தர், வேறொருவர் இல்லை. என்னைத்தவிர தேவன் இல்லை” (ஏசாயா 45:5).

வேதாகமத்தின் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் தேவனுக்கு இந்த பூமியோடு இருக்கும் தொடர்பின் வரலாற்றை நாம் வாசிக்கிறோம்.

## உலகத்தின் ஆரம்பம்

வேதாகமத்தின் முதல் புத்தகம் **ஆதியாகமம்** என்று அழைக்கப்படுகின்றது. அது எப்படியாக தேவன் மரம், செடி



கொடி, மிருக விலங்கு வகைகளை படைத்தார் என்று கூறுகின்றது. மட்டுமல்லாது அவைகள் இந்த பூமியின் மேல் அவைகள் பலுகி பெருகும்படியான சூழ்நிலைகளையும் உண்டு பண்ணினார்.

தேவன் இரண்டு பேரை உருவாக்கினார். ஒரு மனிதனின் பெயர் ஆதாம். ஒரு மனுஷியின் பெயர் ஏவாள். அவர்கள் விலங்குகளைப் போலல்லாது முற்றிலும் வேறுபட்டவர்களாக இருந்தனர். ஏனென்றால், தேவன் அவர்களைத் தம்முடைய ரூபத்தின்படியே உருவாக்கினார்.

## தீமை, துன்பம், மரணம் ஆகியவற்றின் துவக்கம்

ஆதாமும், ஏவாளும் தேவனால் அவர்களுக்கென்று உருவாக்கப்பட்ட மிகவும் அருமையான தோட்டத்தில் வசித்தனர், என்று வேதாகமம் விவரிக்கின்றது. அவர்களுக்குச் செடி, கொடிகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகல விருட்சங்களையும் தேவன் ஆகாரமாகக் கொடுத்தார். ஆனால் தோட்டத்தின் நடுவில் நின்ற ஒரு விசேஷ மரத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார். இந்த கனியைப் புசித்தால் அதன் விளைவு மரணம் என்றும் தேவன் கூறினார்.

ஆகவே தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதா தேவன் அல்லது கீழ்ப்படியாமையைக் காண்பிப்பதா என்று தீர்மானிக்க இந்த முதல் மனிதர்களுக்கு ஒரு தருணம் கிடைத்தது. தேவன் அவர்களைக் கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்தவில்லை. தேவனை நேசித்து அவர் வழிகளில் நடப்பது அல்லது தங்களுடைய சொந்த வழிகளில் நடப்பது, எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம் என்ற முழு சுதந்திரம் கொடுத்தார்.

அந்த தோட்டத்தில் மற்ற எல்லா விலங்குகளைக்

காட்டிலும் அதிபுத்திசாலியான ஒரு சிருஷ்டி இருந்தது. அதுதான் சர்ப்பம். தேவன் இந்த சர்ப்பத்திற்குப் பேசும் வல்லமையைக் கொடுந்திருந்தார். இந்தச் சர்ப்பமானது தேவனால் விலக்கப்பட்டிருந்த மரத்தை ஏவாளிடம் காண்பித்து இதன் கனி புசிப்புக்கு நல்லது என்றும் இதை நீ புசித்தால் சாகவே சாவதில்லை என்றும் கூறியது. ஏவாள் சர்ப்பத்தின் வார்த்தைக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்து கொண்டு, அந்த மரத்தின் கனியைப் புசித்தாள். ஆதாமும் அதன் கனியைப் புசித்தான்.

தேவனுடைய எச்சரிப்பின் படியே ஆதாமும் ஏவாளும் தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் அழிந்துபோகிற சாவுக்கேதுவான படைப்புகளாய் மாறினார்கள். அதுமுதல் மனிதன் மரணத்துக்குப் பாத்திரவானான். தேவன் அவர்கள் மேல் துன்பத்தையும் வருவித்தார்: மனைவியானவள் பிள்ளைபெறும்போது அவள் வேதனை மிகவும் அதிகமாயிருக்கும், அவள் புருஷன் அவளை ஆண்டு கொள்ளுவான். மனிதன் தன் குடும்பத்தாருக்கு ஆகாரம் உண்டாயிருக்கும்படி வியர்வை சிந்தி கடினமாக உழைக்க வேண்டும்.

சர்ப்பமும் தண்டிக்கப்பட்டது, ஏனென்றால் நீங்கள் அந்த விருட்சத்தின் கனியைப் புசித்தாலும் ஆதாமும் ஏவாளும் சாகமாட்டார்கள் என்று பொய் கூறினது. அது முதல் சர்ப்பமானது தேவனால் சபிக்கப்பட்டது. அது மண்ணில் வயிற்றினால் நகரும். அது மட்டுமல்லாது, மனுகுலத்துக்கும் சர்ப்பத்துக்கும் தேவன் பகையை உண்டு பண்ணினார்.

## மனந்திரும்புதலும் மன்னிப்பும்

வேதாகமம் நமக்குத் தேவனுடைய சத்தியத்தையும், இரக்கத்தையும் கற்றுக் கொடுக்கின்றது. **சத்தியம்,** அவருடைய



வார்த்தை சத்தியம். **இரக்கம்,** மனிதர்களை நேசிக்கின்ற தேவன், அவர்கள் சரியானவைகளைச் செய்யாதபோது வருந்தி உணர்வடைய எதிர்பார்க்கின்றார். நாம் உண்மையாக மனந்திரும்பி, அவரிடத்தில் மன்னிப்பைக் கேட்டால் தேவன் நமக்கு மன்னிப்பார்.

தேவனுடைய கட்டளையை மீறுவதற்கு முன்பு முதல் மனிதனும் மனுஷியுமாகிய ஆதாம் ஏவாள் தோட்டத்தில் நிர்வாணிகளாயிருந்தாலும் அவர்கள் வெட்கப்படவில்லை. அவர்கள் கீழ்ப்படியாமல் போன பின்பு நிர்வாணத்தைப் பற்றிய அறிவுடையவர்களாகி வெட்கம்அடைந்தார்கள். தேவன் அவர்களுக்கு விலங்கின் தோல்களை உடையாக மூடும்படி கொடுத்தார். தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார். இந்த விலங்கின் மரணமே வேதாகமத்தில் முதல் மரணம். தேவன் எப்படி தோல் உடைகளைக் கொண்டு இந்தப் பாவ சரீரத்தை மூடும்படி கொடுத்தாரோ, அப்படியே ஒருநாள் பாவத்தை மூடும் நீதியின் ஆடை அவர் கொடுப்பார் என காண்பித்தது.

## ஒரு புதிய நம்பிக்கை

முதல் மனிதனும், மனுஷியும் பாவம் செய்தபோதிலும் தேவன் இந்த பூமிக்காக தாம் வைத்திருந்த திட்டங்களை விட்டுவிடவில்லை. ஒரு பாலகன் வந்து, சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று வாக்களித்தார். வேதாகமம் முழுவதிலும் சர்ப்பமானது பாவத்தைக் காட்டுவதாக நிற்கின்றது. அது மனிதனை தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கத் தூண்டுகின்றது. இருப்பினும் சுமார் நான்காயிரம் வருடங்கள் கழித்து வாக்குத்தத்தத்தின் பாலகனான இயேசு பிறக்கும் வரை இது நிகழவில்லை.

## ஒரு புதிய ஆரம்பம்

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் குழந்தைகள் பிறந்தன. அவர்கள் குழந்தைகளுக்கும் குழந்தைகள் பிறந்தன. இந்த உலகை அதிகமான ஜனம் நிரப்பும் வரைக்கும் குழந்தைகள் பிறந்துகொண்டே இருந்தன. சிலர் தேவனுக்குக் கீழ்ப்படிய தங்களால் ஆனமட்டும் முயற்சித்தார்கள். ஆனால் பலர் மிகவும் தீயவர்களாக இருந்தனர். பலநூறு வருடங்கள் சென்ற பின்பு தேவனுக்குக் கீழ்ப்படிகிற ஒரு குடும்பம் மாத்திரமே விடப்பட்டிருந்தது.

தேவன் வருத்தப்பட்டு கோபம் கொண்டார். ஏனென்றால் மக்கள் சீர்க்கெட்ட பொல்லாதவர்களா யிருந்தார்கள். தேவன் ஒரு புதிய துவக்கத்தை உண்டுபண்ணுவேன், அப்போது இந்த உலகின் எல்லா தீமைகளும் சீர்கேடுகளும் அழிந்துபோகும் என்று தீர்மானம் பண்ணினார். அந்த நல்ல குடும்பத்தின் தகப்பனாரின் பெயர் நோவா. தேவன் நோவாவிடம் ஜீவசுவாசமுள்ள சகலத்தையும் ஜலப்பிரளயத்தைக் கொண்டு அழிக்கப்போகும் திட்டத்தைக் கூறினார். அவர் நோவாவிடம் மிகப் பெரிய ஒரு கப்பலைக் கட்டும்படி கூறினார். அது அவனுடைய குடும்பத்துக்கும் தேவன் பாதுகாக்க விரும்பிய அனேக விலங்குகளையும் பாதுகாக்கப் போதுமானதாகவும் இருக்கும்படி கட்டளையிட்டார். (ஆதியாகமம் 6 படிக்கவும்)

தேவன் பூமியின் மேல் ஜலப்பிரளயத்தை அனுப்பி நோவாவையும் அவன் குடும்பத்தாரையும் தவிர மற்ற அனைத்து நரஜீவன்களையும் அழித்தார். நோவாவின் குடும்பம் தேவன் கூறியபடியே கப்பலைக் கட்டியபடியால் பாதுகாக்கப்பட்டனர். தேவனை விசுவாசித்து அவர் கூறியபடியே அவர்கள் செய்தபடியால் காக்கப்பட்டார்கள். (ஆதியாகமம் 7-9 படிக்கவும்)



ஜலப்பிரளயத்துக்குப் பின்பு மறுபடியும் பூமியின் மேல் ஜனத்தொகை பெருகியது. முதலில் மக்கள் ஒரே இடத்தில் வசித்து ஒரே மொழியைப் பேசினார்கள். அவர்கள் நமக்கு பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லி ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டினார்கள். ஆனால் தேவனுக்கு இது பிரியமாக இருக்கவில்லை. எனவே தேவன் ஜனங்களின் பாஷையைத் தாறுமாறாக்கிப் போட்டார். இந்தக் குழப்பத்தினால் ஜனங்கள் சிதறி வெவ்வேறு இடங்களில் குடியேறினர். இப்படியாக நாடுகள் தோன்றின. அவற்றில் சிலவற்றை இன்றைக்கும் அடையாளம் கண்டுகொள்ளலாம். (ஆதியாகமம் 10 படிக்கவும்)

## தேவனுடைய நோக்கத்திற்காகப் பிரித்தெடுத்த ஜனம்

சில காலத்துக்குப் பின்பு, தேவன் ஒரு மனிதனைத் தெரிந்தெடுத்து அவன் வழிவந்தவர்களை ஒரு ஒப்பற்ற ஜனமாக்க திட்டம் கொண்டார். இந்த ஜனத்திலேயே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகர் பிறக்கவேண்டும் என்றும் நிர்ணயம் பண்ணினார்.

தேவன் தெரிந்துகொண்ட அந்த மனிதனின் பெயர் ஆபிரகாம். அவன் ஊர் என்கின்ற ஒரு பழைமையான பட்டணத்தில் வசித்தான். அது இப்போது ஈராக் நாட்டில் இருக்கின்றது. ஆபிரகாமிடம் அவன் ஜனத்தாரை விட்டு அவர் காண்பிக்கும் புதிய இடத்துக்குப் போகும்படி கூறினார்.

ஆபிரகாம் ஐபிராத்து நதியில் கடந்து அக்கரைக்குப் போனான். எனவே அவன் ஒரு ‘எபிரெயன்’ அல்லது ‘கடந்துபோகிறவன்’ என்று அழைக்கப்பட்டான். மட்டுமல்லாது எபிரெய தேசத்தின் தந்தை அல்லது யூதர்களின் தகப்பன் என்றும் அழைக்கப்பட்டான். தேவன் கானான் என்றழைக்கப்படுகின்ற தேசத்துக்கு அவனைக் கொண்டு

வந்தார். அது முதல் மக்கள் கானானியர்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்றழைத்தனர்.

தேவன், ஆபிரகாம் வயது முதிர்த்தவனாயிருந்த போதிலும் அவனும் அவன் பிள்ளைகளும், அந்த இடத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும், அவன் வழிவந்தவர்கள் நட்சத்திரங்களைப் போல எண்ண முடியாதவர்களுமாய் இருப்பார்கள் என்றும் வாக்குத்தத்தம் பண்ணினார். மட்டுமல்லாது ஆபிரகாமின் மூலம் பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களும் சந்ததியும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும் என்றும் வாக்குத்தத்தம் பண்ணினார். ஆபிரகாம் அந்த இடத்தைச் சுதந்தரிக்கவில்லை. ஆனால் தேவன் ஆபிரகாமை மரணத்திலிருந்து எழுப்பி வருங்காலத்தில் அதை சுதந்தரிக்கச் செய்ய வல்லவர். இந்த நம்பிக்கையின் செய்தியை வேதாகமம், தேவனை உண்மையாய் விசுவாசிக்கும் மற்ற விசுவாசிகளுக்காக பலமுறை எடுத்துக் கூறுகின்றது. (எபிரெயர் 11 படிக்கவும்)

ஆபிரகாமின் மகன் ஈசாக்கும் அவன் வழி வந்தவர்களும் பெரிய ஜனங்களாக எழும்பினர்; மாறினர். ஈசாக்குடைய மகன் பெயர் யாக்கோபு, அவனைத் தேவன் இஸ்ரவேல் என்றழைத்தார். தேவனுடைய திட்டங்கள் யாக்கோபின் (இஸ்ரவேல்) வழி வந்தவர்கள் மூலமாய் நிறைவேற்றப்பட வேண்டியதாய் இருந்தது.

யாக்கோபின் (இஸ்ரவேல்) வழி வந்தவர்கள் கானான் தேசத்தில் அலைந்து திரிகிற மேய்ப்பர்களாய் வாழ்ந்தார்கள். பின்பு அந்த தேசத்தில் ஒரு கொடிய பஞ்சம் வந்தபோது அவர்கள் எகிப்து தேசத்தில் குடியேறினார்கள். 1400 வருடங்களுக்குப் பின்பு எகிப்தியர்கள் அவர்களை அடிமைகளாக்கினர். ஆனால் அவர்களை விடுவிக்கும்படி தேவன் மோசே என்ற மனிதனை அனுப்பினார்.



மோசேயின் கதை வேதாகமத்தின் இரண்டாம் ஆகமத்தில் **(யாத்திராகமம்)** இருக்கின்றது. தேவன் எகிப்து தேசத்தின் மேல் கொள்ளை வாதை நோய்களை அனுப்பி எகிப்தின் ராஜா இஸ்ரவேல் மக்களை விடுதலையாய் அனுப்பிவிட கட்டாயப்படுத்தினார். மோசே அவர்களை வனாந்திரத்தின் வழியாய் மறுபடியும் கானான் தேசத்துக்கு வழி நடத்தினான். தேவன் அவர்களுக்கு விசேஷமான கட்டளைகளை **லேவியராகமம், உபாகமம்** ஆகிய ஆகமங்களில் கொடுத்தார், அது இஸ்ரவேலருக்கு எப்படி வாழவேண்டும் என்பதனை வெளிப்படுத்தியது. மோசே மரித்த பின் யோசுவா இஸ்ரவேல் ஜனங்கள் கானானியர்களை தோற்கடிக்க அந்த தேசத்துக்கு நேராக வழிநடத்தினான். **யோசுவா**வின் புத்தகத்தில் தேவன் எப்படி இஸ்ரவேல் ஜனங்களோடிருந்து, அவர்களுக்கு வாக்களித்தபடியே அந்த இடத்தைக் கொடுத்தார் என்று கூறுகின்றது.

அடுத்த புத்தகமாகிய **நியாயாதிபதிகள்,** இஸ்ரவேல் ஜனங்கள் எப்படி தங்கள் தேசத்தில் வசித்தார்கள் என்றும், அவர்களை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகள் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு மாத்திரம் ஆராதனை செய்ய எத்தனை முயற்சிகள் செய்தும் இந்த ஜனம் அடிக்கடி உருவ வழிபாடு செய்ததால் தேவன் கோபம் கொண்டார் என்றும் கூறுகின்றது.

**1. சாமுவேல்** மற்றும் **2. சாமுவேல்** ஆகிய புத்தகங்களில் எப்படி இஸ்ரவேல் ஜனங்கள் அடுத்த நாடுகளின் இராஜாக்களோடு யுத்தம் செய்ய தங்களை வழிநடத்த ஒரு இராஜா வேண்டும் என்று கேட்டார்கள் என்று வாசிக்கின்றோம்.

இஸ்ரவேலின் முதல் அரசன் சவுல். தன்னுடைய அரசாட்சியை கண்ணியமானதாய் ஆரம்பித்து கீழ்ப்படியாமையில் முடித்தான். எனவே தேவனால் புறக்கணித்துத் தள்ளப்பட்டான். தேவன் வேறொரு ராஜாவை

அழைத்தார். அவன் பெயர் தாவீது. அவன் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன் (அப்போஸ்தலர் 13:22). இந்த அரசனும் அவனுடைய மகன் சாலொமோனும் இஸ்ரவேல் நாட்டை மிகச்சிறந்த நாடாக்கினார்கள். ஒரு சிறந்த தேவாலயம் கட்டப்பட்டது. சுற்றிலும் இருந்த நாடுகளிலுள்ள ஜனங்கள் கப்பம் கட்டுவதற்காகவும், தேவனுடைய மகிமை இந்த பூமியில் அரீரது அரசாட்சியின் மேல் ஜொலிப்பதை பார்க்கும்படியாகவும் வந்தனர். தாவீது ஒரு இசைஞானி. சங்கீதம் புத்தகத்தில் தாவீதுடைய பாட்டுக்கள் பல இருக்கின்றன.

துக்ககரமாக, அவனுக்குப்பின் வந்த அரசர்கள் அவனைப்போன்று சிறந்தவர்களாக இராதபடியால் சாலொமோனுக்குப் பின் இஸ்ரவேல் நாடு வடக்கு மற்றும் தெற்கு இராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த காலங்களைப் பற்றி நாம் **1. இராஜாக்கள்** மற்றும் **2. இராஜாக்கள்** ஆகிய புத்தகங்களில் வாசிக்கலாம்.

தேவன் பல தீர்க்கதரிசிகளைத் தமது வழிகளைக் கூறி அறிவிக்கும்படி அனுப்பியும், இஸ்ரவேல் தேசத்தின் வட இராஜ்ஜியத்தில் ஒரு அரசன் கூட நல்லவனாக ஒருபோதும் இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக **எசேக்கியேல், ஓசியா,** மற்றும் **ஆமோஸ்** ஆகிய புத்தகங்கள். இறுதியில் அசீரியப் படைகளால் வடக்கு இராஜ்ஜியம் சிறைப் பிடிக்கப்பட்டது.

தென் தேசமாகிய யூதேயா தேசத்தில் சில இராஜக்கள் நல்லவர்களாவும் பலர் பொல்லாதவர்களாகவும் இருந்தனர். தேவன் பல தீர்க்கதரிசிகளை இந்த தேசத்திற்கும் அனுப்பினார். எடுத்துக்காட்டாக **ஏசாயா, எரேமியா, மீகா.** இறுதியில் யூதேயா நாடும் பாபிலோனியப் படைகளால் சிறை பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டனர்.

பின்பு **எஸ்றா, நெகேமியா** ஆகிய புத்தகங்களின்படி இந்த யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பவும் இஸ்ரவேல்



நாட்டிற்கு வந்துவிட்டனர். எருசலேமில் தேவனுடைய ஆலயத்தை மறுபடியும் கட்டினர். ஆனால் அது சொலொமோன் அரசனால் கட்டப்பட்ட பழைய தேவாலயத்தைப் போல சிறப்பாக அமையவில்லை.

## வாக்குப் பண்ணப்பட்ட இரட்சகர்

பாரசீகர்கள், கிரேக்கர்களுக்குப்பின் இறுதியாக ரோமர்கள் இஸ்ரவேல் தேசத்தை ஆண்டனர். எருசலேமுக்கு யூத அரசர் யாரும் இல்லாதிருந்தனர். ''தேவன் தெரிந்துக்கொள்ளும் காலம் வரைக்கும் ஒரு அரசனும் இனி எழும்புவதில்லை'' என்று தேவன் முன்னுரைத்திருந்தார் (எசேக்கியேல் 21:27).

பல தலைமுறைகளாக தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலருக்கு ஒரு இரட்சகரை வாக்குத்தத்தம் செய்தனர். அந்த இராஜாவே தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுபவராக இருந்தார். இந்த இரட்சகருக்கு "மேசியா" அல்லது "கிறிஸ்து" என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இரண்டு வார்த்தைகளும் 'அபிஷேகம் பண்ணப்பட்டவர்' என்ற பொருள் கொண்டவை. இது ஏனென்றால் தேவன் அவரை முழு உலகிற்கும் இராஜாவாக அபிஷேகம் பண்ணியிருந்தார்.

## இயேசுவின் பிறப்பு

புதிய ஏற்பாட்டில் **மத்தேயு** மற்றும் **லூக்கா** ஆகிய சுவிசேஷங்களில் எப்படி இஸ்ரவேல் தேசத்தில் மரியாள் என்ற கன்னிகைக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்று கூறுகின்றது. தேவனுடைய வல்லமை அல்லது பரிசுத்த ஆவி அவள்மேல் வந்தது. எனவே இயேசுவாகிய இந்த பாலகன் தேவனுடைய குமாரன். அவர் மனித குமாரனும் ஆவார். ஏனென்றால் அவருடைய தாயார் ஒரு சாதாரணப் பெண். மற்ற எல்லா ஆண்கள், பெண்களைப் போலவே அவரும்

தமது வாழ்க்கை முழுவதும் பிரச்சனைகள், போராட்டங்கள், சோதனைகளைச் சந்தித்தார்.

மரியாள், யோசேப்பு என்கிற தேவபக்தியுள்ள ஒரு மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருந்தாள். தேவன் ஒரு தூதனை யோசேப்பிடம், 'இந்தப் பாலகன் தேவனிடமிருந்து வந்தவர். ஒரு மனிதனிடமிருந்து வரவில்லை' என்று கூறும்படி அனுப்பினார். மரியாளுக்குப் பிரசவகாலம் சமீபமாயிருக்கையில் அவர்கள் பெத்லகேமுக்குப் பிரயாணம் பண்ண நேரிட்டது. மரியாளும் யோசேப்பும் அங்கே போய் சேர்ந்தபோது தங்குவதற்கு இடமில்லாத படியினால் மிருகங்களின் கொட்டகையில் தங்கினர். அங்கே இயேசு பிறந்தார். அந்த இரவு முழுவதும் முன்னணையே அவரது தற்காலிக படுக்கையாக இருந்தது. எனவே உலக இரட்சகர் எளிமை, வறுமை, தாழ்மை ஆகிய சூழ்நிலைகளில் பிறந்தார்.

## இயேசுவின் போதனைகளும் சாதனைகளும்

இரட்சகராகிய இயேசு வட இஸ்ரவேலில் நாசரேத் என்கிற ஒரு சிறிய கிராமத்தில் வளர்ந்தார். அவர் தச்சனாகிய யோசேப்பின் தொழிலை நன்கு கற்றறிந்திருந்தார். அவருக்கு முப்பது வயதானபோது அவர் வரப்போகிற தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் போதிக்கவும், கற்றுக் கொடுக்கவும் ஆரம்பித்தார். தேவனுடைய வல்லமையினால் நோயாளிகளைக் குணப்படுத்தினார். தமக்குச் செவிகொடுத்தவர்களுக்கு அவர்கள் வாழவேண்டிய வழியைக் காண்பித்து அந்த இராஜ்ஜியத்துக்கு அவர்களை ஆயத்தம் பண்ணினார். இயேசு, தேவனை ஒரு தகப்பனாக அவருடைய பிள்ளைகளுக்குக் காண்பித்தார். அவருடைய சீஷர்களிடம் 'எங்கள் பிதாவே' என்று தேவனை ஜெபத்தில் அழைக்கும்படி கற்றுக் கொடுத்தார்.



இயேசுவைப் பன்னிரண்டு சீஷர்கள் பின்பற்றினர். தேவனுடைய வழிகளை மக்களுக்குக் காண்பிக்க அவர் இஸ்ரவேல் தேசம் முழுவதும் பிரயாணம் பண்ணினார். அதிகமான ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றின படியால் யூத தலைவர்கள் இயேசுவின் மேல் பொறாமை கொண்டு அவரைக் கொல்ல சதி செய்தனர்.

இயேசு ஜனங்களிடம் அதிகமாக உவமைகளாகவே பேசினார். அவர் இந்த உவமைகளின் பொருள்களை தம்முடைய சீஷர்களுக்கு விவரித்துக் கூறினார். உவமைகள் அதிகமாய் இந்த பூமியின் மேல் வரப்போகும் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்தும், அது எப்படி இருக்கும் என்றும், யார் அதில் இருப்பார்கள் என்றும், எப்படி அதற்கென்று ஆயத்தமாவது என்பதைக் குறித்துமே இருந்தன. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் வாழ்க்கை குறித்த நான்கு புத்தகங்கள் உள்ளன. அவைகள் யாதெனில் **மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்,** எழுதின சுவிசேஷங்கள் ஆகும்.

மூன்றரையாண்டு காலம் போதித்த பின் பிரதான ஆசாரியரும் இஸ்ரவேலை ஆண்டுக் கொண்டிருந்த ஆட்சியாளர்களும் இயேசுவைக் கைது செய்வதில் வெற்றிக்கொண்டனர். அவர்கள் அவரைப் பல காரியங்களில் குற்றப்படுத்தி, இவன் மரணத்துக்குப் பாத்திரவான் என்றனர். துரிதமான அநியாய விசாரணைக்குப்பின், அவர்கள் அவரை ரோம தேசாதிபதியிடம் ஒப்புக்கொடுத்து, அவரை மரணத்துக்கு ஒப்புக்கொடும் என்று கேட்டனர். சிறிது தயக்கத்துக்குப்பின், தேசாதிபதி அவரை ரோம வழக்கபடி சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுத்தான். சிலுவையில் ஆணிகளால் அறைந்து அந்த சிலுவையைப் பூமியின்மேல் ஒரு துளையில் நாட்டினர். இப்படியாக துன்பப்படுத்தப்பட்ட இயேசு பலமணி நேரங்கள் வேதனையைச் சகித்தபின் மரித்தார். இயேசு ஒரு பாவமில்லாத

மனிதனாய் மரித்தார், அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததே இல்லை.

மனிதகுலம் பாவத்தினிமித்தம் பெறவேண்டிய மரண தண்டனையை அவர் வெளிப்படையாகப் பெற்று அனுபவித்தார்.

## இயேசுவின் உயிர்த்தெழுதல்

மூன்று நாட்கள் முடிந்ததும் தேவன் அவரை மரணத்திலிருந்து உயிரோடெழுப்பினார். இயேசுவின் உடலைக் காணவில்லை என்றதும் அவரைக் கொன்ற யூதர்கள் குழம்பிப் போனார்கள். ஆனால் அவரது சீடர்கள் அவர் உயிரோடெழுந்தார் என்று திட்டவட்டமாய் அறிவித்தார்கள்.

தொடர்ந்து வந்த சில வாரங்களாக இயேசு பரமேறுவதற்கு முன் சுமார் ஐநூறுக்கும் அதிகமான சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி காண்பித்தார்.

இயேசுவின் சீஷர்கள் இப்பொது மிகுந்த தைரியத்துடன் இயேசு கற்பித்த அந்த வரப்போகிற இராஜ்யத்தைக் குறித்துப் போதித்தார்கள். மட்டுமல்லாது இயேசு இரத்தம் சிந்தி மரித்து உயிரோடெழுந்ததினால், எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட முடியும் எனவும் போதித்தனர். யூதர்களால் அவர் மரித்தவராகவே இருக்கின்றார் என்று காண்பிக்கவும் முடியவில்லை, தேவனுடைய வல்லமையினால் சீஷர்களால் நடந்த குணமாக்கும் அற்புதங்களை அவர்களால் எதிர்க்கவும் முடியவில்லை.

## கிறிஸ்தவம் பரவியது

**அப்போஸ்தலருடைய நடபடி**களில் எப்படி கிறிஸ்தவம் ரோம சாம்ராஜ்யத்தில் பரவியது என்றும், பல பட்டணங்களில் எப்படி விசுவாசிகளின் கூட்டம் உருவானது என்றும் நாம் வாசிக்கின்றோம். வேதாகமத்தின், புதிய ஏற்பாட்டின் முக்கால்



பகுதியும் இயேசுவின் சீஷர்கள் இந்த புதிய விசுவாசிகளுக்கு எழுதிய கடிதங்களாலானது ஆகும். இந்த கடிதங்கள் அவர்களுக்குத் தேவனுடைய கட்டளைகளை வெளிப்படுத்துகிறதாயும், அவர் வழிகளில் நடக்க உதவுகிறதாயும் இருந்தது. அவற்றுள் பல கடிதங்கள் ஒரு மனந்திரும்பிய யூதனாகிய பவுலினால் எழுதப்பட்டது. அவைகள் யாதெனில் **ரோமர், 1. கொரிந்தியர், 2. கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர்** என்பன ஆகும்.

இயேசுவின் சீஷர், தேவனுடைய திட்டம் யூதர்களுக்கென்று மட்டுமல்லாது, உலகமெங்கும் உள்ள அனைத்து மனுக்குலத்திற்கும் இருப்பதை காண்பித்தனர். அதின் செய்தி என்னவென்றால், எவ்விடத்திலுமுள்ள ஒவ்வொரு மனிதனும் தேவனைப்பற்றி அறிந்திருக்கவேண்டும். பாவமன்னிப்புக்கென்று தங்கள் தீமையான காரியங்களிலிருந்து மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும். இயேசுவின் சீஷர்கள் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, தேவன் ஆபிரகாமுக்கும் பழைய ஏற்பாட்டின் விசுவாச வீரர்களுக்கும் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று வெளிப்படுத்தினார்கள்.

தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைக் குறித்தும் கூறப்பட்ட இந்த நற்செய்தியை விசுவாசித்த அநேக மக்கள் அந்த நாட்களில் ஞானஸ்நானம் பெற்றனர். அவர்கள் தண்ணீருக்குள் முழுவதுமாக மூழ்கியபோது தாங்கள் இயேசுவோடு மரிக்க ஆயத்தம் எனவும், அதன் பின்பு தண்ணீரிலிருந்து எழுந்தபோது ஒரு புதிய வாழ்க்கைக்கென்று வந்தனர் என்பதையும் குறிக்கின்றது. இயேசுவும் தமது சீஷர்களிடம், தேவனுடைய நற் செய்தியைப்

பிரசங்கிக்கவும் விசுவாசிக்கின்ற எல்லா ஜனத்துக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவும் கட்டளையிட்டார்.

## வேதாகமத்தின் கடைசி புத்தகம்

வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய **வெளிப்படுத்தின விசேஷத்தில்** தேவனும் இயேசு கிறிஸ்துவும் முதலாம் நூற்றாண்டின் ஏழு சபைகளுக்கும் வெளிப்படுத்தி கூறிய செய்தியைத் தருகின்றது. இந்தப் புத்தகம் வருங்காலத்தில் நடக்கப் போகிற சம்பவங்களைக் குறித்து அடையாளமாக கூறுகிறது. முக்கியமாக, பழைய ஏற்பாட்டைக் குறித்தும், வேதாகமத்தின் முந்தின பாகங்களைக் குறித்தும் பல தவறான எண்ணங்கள் இருக்கின்றன.

**வெளிப்படுத்தின விசேஷம்** என்ற புத்தகத்தோடு வேதாகமம் நிறைவு பெறுகின்றது. அதைத்தவிர தேவனிடமிருந்து வேறு எந்த தூய எழுத்துக்களும் கொடுக்கப்படவில்லை. நிரந்தரமான மரணத்திலிருந்து தப்பும்படி ஒரே வழியை வேதாகமம் தருகின்றது. (அப்போஸ்தலர் 4:12, அப்போஸ்தலர் 16:30-31) இந்த வேதாகமம் எல்லா ஜாதி, எல்லா நிறம், எல்லா நாகரீகம், பணக்காரர் ஏழைகள், ஆண் பெண், முதியோர், வாலிபர் எல்லோருக்கும் உரியது. இதில் ஜீவனுள்ள வார்த்தைகள் உள்ளன. இந்த வார்த்தைகளால் உண்மையாகவே வாழ்க்கையை மாற்றி அமைக்க முடியும்.

## வேதாகமம் ஏன் எழுதப்பட்டது?

வேதாகமம் ஒரு விசேஷமான புத்தகம். அது ஆயிரக்கணக்கான வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. வேதாகமம் நூற்றுக்கணக்கான மொழிகளிலும், துணை மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்டுள்ள வேதாகமத்தின் பழமையான



பிரதிகளில் காணப்படுகிற வார்த்தைகளில் எந்த வித்தியாசமும் காணவில்லை.

தம்மைத் தேவன் வெளிப்படுத்தவே வேதாகமம் எழுத காரணர் ஆனார். யார் பராக்கிரமம், மனித ஞானம், செல்வம் இவைகளின்மேல் நாட்டத்தோடு இருக்கின்றார்களோ அவர்கள்மேல் அவர் பிரியமாயிருப்பதில்லை.

“மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரேமியா 9:24).

மக்கள் தங்கள் சொந்த வழிகளை விட்டு தேவனுக்கு நேராய் திரும்புவதையை தேவன் எதிர்பார்க்கிறார். தேவன் தம்மை நம்பி தங்களுடைய விசுவாசம், எதிர்பார்ப்பு முழுமையும் தம் மேலேயே வைக்கும் ஜனங்களைத் தேடுகிறார். மனுக்குலத்திற்கென்ற ஒரு திட்டம் இருப்பதைக் காண்பிக்கவே தம்முடைய வார்த்தைகளைத் தேவன் எழுதினார். மட்டுமல்லாது அவருக்கு நேராகத் திரும்பி, இரட்சிக்கப்பட்டு நித்தியகாலமாக இந்த பூமியின்மேல் வரும் அவருடைய இராஜ்யத்தில் நாம் வாழவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.

## இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்?

இயேசுவின் சீஷர்கள் இயேசு பரமேறியவுடனே எருசலேமிலுள்ள யூதர்களுக்கு மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தனர். பல யூதர்கள் தாங்கள் தேவனுடைய குமாரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததை உணர்ந்து தங்கள் இருதயத்திலே குத்தப்பட்டார்கள். அவர்கள்

சீஷர்களிடம் “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டனர். (அப்போஸ்தலர் 2:37-38)

அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதில் அவர்கள் புரிந்து கொள்ளும்படியாகவும் மிக எளிதானதாகவும் இருந்தது. “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்''. வேறு ஒரு சூழ்நிலையில் இப்படியாகக் கேட்கப்பட்டது: ‘‘நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன?” (அப்போஸ்தலர் 8:36-38). இந்த நேரம் பதில் இப்படியாக இருந்தது, ‘‘நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை”.

இக்காலத்துக்கும் இதே பதில் பொருந்தும். உண்மையாக ஜீவிக்கின்ற தேவனை அறிந்து, புரிந்துகொள்ள வேதாகமத்தை வாசிப்பது இன்றியமையாதது. ஆரம்ப காலத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுத்ததைப்போலவே தேவன் நமக்கும் எதை வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் அவரது செய்தியைப் புரிந்து ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, அவரைப் பின்பற்றும்படி தங்களை ஒப்புக்கொடுத்த மற்ற விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளவேண்டும்.

வேதாகமத்தை நீங்கள் தனியாக வாசியுங்கள். “கிறிஸ்துவின் கட்டளை” என்கின்ற இலவச கைப்பிரதிக்காக உறையின் மேல் இருக்கும் முகவரிக்கு எழுதுங்கள். எல்லா நாட்களும் வேதத்தை வாசிப்பதற்கென்று நேரத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஏன் இந்த வேதாகமம் பலருடைய வாழ்க்கையை நன்மைக்கு ஏதுவாய் மாற்றி அமைக்கின்றது என கண்டுகொள்ளுங்கள். பரம பிதாவாகிய தேவன் தம்முடைய பிள்ளைகளில் ஒருவராக உன்னையும் அழைத்திருக்கிறார். நீ செவிகொடுப்பாயா?

**மைக் புல்**



**கேள்விகள்**

1. வேதாகமத்தை எழுதியது யார்?
2. ஏன் வேதாகமத்தை நம்பலாம் என இரண்டு காரணங்கள் கூறுக.
3. வேதாகமத்தின் முதல் ஆகமத்தின் பெயர் என்ன?
4. யாக்கோபிடமிருந்து தோன்றிய நாடு எது?
5. ‘சங்கீதம்’ என்றால் என்ன?
6. ‘தீர்க்கதரிசி’ என்றால் என்ன?
7. இயேசுவின் பிறப்பைக்குறித்து எந்தெந்த புத்தகங்கள் கூறுகின்றன?
8. இயேசு செய்த விசேஷமான காரியம் என்ன?
9. தேவன் நமக்கு வேதாகமத்தைக் கொடுத்தது ஏன்?
10. இரட்சிக்கப்பட நாம் என்ன செய்யவேண்டும்?

இலவச வேதவாசிப்புத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு எழுதுங்கள்.

**கிறிஸ்டடெ.ஃல்பியன்ஸ்**
**தபால் பெட்டி எண் 4237**
**பெங்களூர் 560042, இந்தியா**

நூல் வெளியிட்டு அச்சிட்டோர்:
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**

| | |
|---|---|
| The Communications and Literacture requests from Readers in Karnataka, Kerala & Tamilnadu | கர்நாடகம், கேரளா, மற்றும் தமிழ்நாடு பொது தொடர்பு விலாசம் |
| **The Christadelphians,**<br>P.O. Box 4237<br>Bangalore - 560042. INDIA. | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **4237**<br>பெங்களூர் **560042**<br>இந்தியா |
| **<u>Elsewhere :</u>** | <u>இதர மாநிலங்கள்:</u> |
| **The Christadelphians,**<br>G.P.O. Box 159,<br>Hyderabad, A.P. 500001<br>India | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **159**<br>ஐதராபாத், ஆந்திரா **500001**<br>இந்தியா |
| **The Christadelphians,**<br>P.O. Box 60,<br>Negombo - 11500,<br>SRI LANKA | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **60**<br>நெகொம்போ - **11500**<br>ஸ்ரீலங்கா |
| **The Christadelphians,**<br>P.O. Box 9052,<br>Banani, DAKA - 1213<br>BANGLADESH | **கிறிஸ்டடெஃல்பியன்ஸ்**<br>தபால் பெட்டி எண் **9052**<br>பனானி, டாக்கா - **1213**<br>பங்களாதேஷ் |